

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (31.7.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், திரைப்பட இயக்குநர் சந்தோஷ் சந்தித்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் 1 இலட்சம் சிறிய புகைப்படங்களைக் கொண்டு தான் உருவாக்கிய, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உருவம் கொண்ட புகைப்படத்தை வழங்கி, வாழ்த்துப் பெற்றார். உடன் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் ஆர்.எஸ். பாரதி, டி.கே.எஸ். இளங்கோவன், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் பூச்சி எஸ். முருகன், திரைப்பட இயக்குநர்கள் ஆர்.கே. செல்வமணி, லிங்குசாமி ஆகியோர் உள்ளனர்.

### தி.மு.க. தலைமை இலக்கிய அணி சார்பில் – “கலைஞர் 100 கவிதைகள் – 100” நூல் வெளியீடு!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட - கி.வீரமணி பெற்றுக்கொள்கிறார்!

## கவிப்பேரரசு வைரமுத்து முன்னிலை! நா.சந்திரபாபு விழா ஏற்பாடு!

சென்னை, ஆக. 2 -

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு கழக இலக்கிய அணி சார்பில் 100 கவிஞர்கள் எழுதியுள்ள கவிதை தொகுப்பினை கவிப்பேரரசு வைரமுத்து தொகுத்து வழங்கியுள்ள “கலைஞர்- 100 - கவிதைகள் - 100” நூலினை 7.8.2024 அன்று காலை 10 மணிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட, கவிப்பேரரசு வைரமுத்து முன்னிலையில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி பெற்றுக்கொள்கிறார்.**

தொடர்ந்து மாலை 5 மணிக்கு அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நூல் அறிமுக விழா நடைபெறுகிறது. இதில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமை வகிக்கிறார். அணி தலைவர் வி.பி.கலைராஜன் வரவேற்றுப் பேசுகிறார்.

நிகழ்ச்சியில் முன்னாள் எம்.பி. டி.கே.எஸ். இளங்கோவன், அன்பகம் கலை, பூச்சி எஸ். முருகன், துறைமுகம் காஜா, மாவட்டச் செயலாளர்கள் நே.சிற்றரசு, மயிலை த.வேலு எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

அமைச்சர் எ.வ.வேலு, திருச்சி சிவா எம்.பி., கவிப்பேரரசு வைரமுத்து ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர். நிகழ்ச்சி நெறிவாளர் தஞ்சை கூத்தரசன்.

கவிச்சுடர் கவிதைப் பித்தன், மு.தென்னவன், நந்தனம் நம்பிராஜன், ஈரோடு இறைவன், செந்தலை கவுதமன், டாக்டர் ந.எழிலன் எம்.எல்.ஏ., எம்.கே.மோகன் எம்.எல்.ஏ., மா.பா.அன்புதுரை, நந்தனம் கி.மதி, பேரா் முரசு கதிரவன், மாநில இலக்கிய அணி நிர்வாகிகள் நா.செந்தில், பேரா சேவுகபெருமாள், கே.எஸ்.எம். நாதன், சி.தசரதன், அ.திராவிட மணி, காரை வெங்கடாசலம், பெருநாழி போஸ், நேரு பாண்டியன், ஆடுதுரை உத்திராபதி, பரம்புரம் பழனி, ஸ்ரீதர், பகுதிச் செயலாளர்கள் நா.இராமலிங்கம், பரமசிவம், ஏ.ஆர்.பி.எம்.காமராஜ், எஸ். மதன்மோகன், வினோத் வேலாயுதம், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர்கள் மு.சீனிவாசன், விஜய் வெங்கடேசன் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

விழா ஏற்பாட்டினை கழக இலக்கிய அணி பொருளாளர் நா.சந்திரபாபு செய்துள்ளார்.

### கடந்த ஐந்தாண்டுகளில், தமிழ்நாட்டில்

# விளையாட்டுத் துறையை மேம்படுத்த ஒதுக்கிய நிதி எவ்வளவு?

## மக்களவையில் தயாநிதி மாறன் கேள்வி!

புதுடெல்லி, ஆக.2-

கடந்த ஐந்தாண்டுகளில் ஒன்றிய அரசு தமிழ்நாட்டில் விளையாட்டுத் துறையை ஊக்குவிக்க புதிய திட்டங்களைத் தொடங்கியுள்ளதா எனவும் அத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி மற்றும் அத்திட்டங்களின் தற்போதைய நிலை உள்ளிட்ட பல்வேறு கேள்விகளை நாடாளுமன்றத்தில் ஒன்றிய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சகத்திடம் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத்தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் கேள்வி எழுப்பினார்.



அதன் விவரங்கள் பின்வருமாறு :

ஒன்றிய அரசு கடந்த ஐந்தாண்டுகளில் தமிழ்நாட்டில் விளையாட்டுத் துறையை ஊக்குவிக்க புதிய திட்டங்களைத் தொடங்கியுள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் இந்தத் திட்டங்களின் முக்கிய நோக்கங்கள் மற்றும் விளைவுகள் என்ன என கேள்வி எழுப்பினார்.

கடந்த ஐந்தாண்டுகளில் தமிழ்நாட்டில் இளைஞர் நலன் மற்றும் விளை யாட்டுத் திட்டங்களுக்கான மொத்த பட்ஜெட் ஒதுக்கீடு மற்றும் கடந்த ஐந்து ஆண்டுகளில் மற்ற மாநிலங்களுக்கு ஆண்டு வாரியாக/மாநில வாரியாக வழங்கப்பட்ட தொகையின் விவரங்கள் என்ன என கேள்வி எழுப்பினார்.

தமிழ்நாட்டில் இளைஞர் நலனை மேம்படுத்துவதற்காக ஒன்றிய அரசு செயல்படுத்திய திட்ட ங்களின் விவரங்கள் மற்றும் இந்தத் திட்டங்கள், இளைஞர்கள் எதிர்கொள்ளும் தேவைகள் மற்றும் சவால்களை நிவர்த்தி செய்ததா என கேள்வி எழுப்பினார்.

மேற்படி மாநிலத்தில் விளையாட்டை மேம்படுத்த புதிய திட்டங்கள் அல்லது முயற்சிகளை தொடங்குவதற்கு அரசாங்கம் ஏதேனும் திட்டங்களை வைத்திருக்கிறதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன என கேள்வி எழுப்பினார்.

தமிழ்நாட்டிலுள்ள உள்ளாட்சி அமைப்புகள், பள்ளிகள் மற்றும் விளையாட்டு சங்கங்களுடன் ஒன்றிய அரசு தனது திட்டங்களை செயல்படுத்த கலந்தாலோசனை மேற்கொண்டதா

இவ்வாறு தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

### தி.மு.க.வின் சட்டப் போராட்டத்தால்

# பலன் பெற்ற 15,066 ஓ.பி.சி. பிரிவு மாணவர்கள்!

## மூத்த வழக்கறிஞர் பி. வில்சன் தகவல்!

சென்னை, ஆக. 2-

மருத்துவப் படிப்புக்கான மத்திய தொகுப்பு இடங்களில் ஓபிசி பிரிவினருக்கு 27 சதவீத இட ஒதுக்கீடு வழங்க ஒன்றிய அரசு மறுப்பு தெரிவித்தது. இதனைத் தொடர்ந்து இதனை எதிர்த்து மாநிலங்களவையில் மூத்த வழக்குரைஞர் பி.வில்சன் மூலம் தி.மு.கதான் உச்சநீதி மன்றத்தில் ‘ரிட்’ மனு தாக்கல் செய்தது.

1993 ஆம் ஆண்டில் இட ஒதுக்கீட்டுக் கொள்கையைப் பின்பற்றி, தமிழ்நாட்டில் இருக்கும் மருத்துவக் கல்லூரிகள் மற்றும் பல் மருத்துவக் கல்லூரிகளில் அகில இந்திய ஒதுக்கீட்டில் மாணவர்கள் சேர்க்கப்பட வேண்டும் என்று உயர்நீதிமன்றத்தில் தி.மு.க. வாதிட்டது.இந்த வழக்கில், உயர்நீதிமன்றத்தை நாடுமாறு உச்சநீதி மன்றம் தீர்ப்பளித்தது. இதையடுத்து சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தது தி.மு.க.

இது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு விசாரணையில் 50 சதவீத இட ஒதுக்கீட்டை இதர பிற்படுத்தப்பட்ட பிரிவு மாணவர்களுக்கு வழங்க உயர்நீதி மன்றம் உத்தரவிட்டது. மேலும் ஒன்றிய, மாநில அரசுகள் மற்றும் இந்திய மருத்துவ கவுன்சில் பிரதிநிதிகள் அடங்கிய குழு அமைத்து இட ஒதுக்கீடு வழங்குவது குறித்து முடிவெடுக்க வேண்டும் என அறிவுறுத்தியது.

அதேநேரத்தில் இந்த இட ஒதுக்கீட்டை நடப்பு கல்வி ஆண்டிலேயே அமல்படுத்தக்கோரி தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. அதுதொடர்பான விசாரணையின்போது, ஓ.பி.சி மாணவர்களுக்கு மருத்துவப் படிப்பில் இந்த ஆண்டே இடஒதுக்கீடு வழங்குவதற்கான எந்த சாத்தியக்கூறுகளும் இல்லை என ஒன்றிய அரசு பதில் மனு அளித்தது.

இதனால் உயர்நீதிமன்றத்தில் தி.மு.க சார்பில் ஒன்றிய அரசு மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் ஒன்றிய அரசு பதிலளிக்க 2 வார காலம் அவகாசம் வழங்கினர். அதனைத் தொடர்ந்து ஓ.பி.சி இட ஒதுக்கீட்டை இந்தாண்டே வழங்கப்படும் என்று ஒன்றிய அரசு அறிவித்தது. அதனைத் தொடர்ந்து கடந்த மூன்று ஆண்டுகளாக மருத்துவ படிப்பில் ஓ.பி.சி இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது.



இந்த நிலையில், திமுகவின் சட்டப்போராட்டத்தால் 15,066 ஓ.பி.சி. மாணவர்கள் பயன்பெற்றுள்ளதாக திமுக எம்.பி., வில்சன் கூறியுள்ளார். இது குறித்து தனது சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், “தலைவர் தளபதியார் மு.க. ஸ்டாலின் முயற்சியா லும் அவரின் தொடர் அறிவுறுத்தலின் பேரில் நான் மேற்கொண்ட சட்டப்போராட்டத்திற்குப் பிறகு சென்னை நீதிமன்றம் 27.7.2020 அன்று உத்தரவிட்டும் அதனை மதிக்காததால் நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் தண்டனை பெற்றுத் தர நான் வாதாடிய பின்பு நீட் தேர்வை நீதிமன்ற உத்திரவின் மூலம் நிறுத்திய பின்பு அதற்கு பயந்து, பணிந்த மோடி அரசு, வேறு வழியின்றி, ஜுலை 29 2021, அன்று மருத்துவக் கல்விக்கான அனைத்திந்தியத் தொகுப்பிற்கு மாநில அரசுகள் தரும் இடங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27% இடஒதுக்கீடு தர ஒப்புக்கொண்டது.

உச்சநீதி மன்றதிலும் தலைவர் அறிவுறுத்தலின் பேரில் நான் ஆஜராகி இடஒதுக்கீடு தந்தது சரியே என வாதிட்டு வெற்றி பெற்றேன். சட்டப் போராட்டத்தின் விளைவாக இந்தியா முழுவதும் உள்ள 5,022 க்கும் மேற்பட்ட பிறபடுத்தப்பட்ட மாணவர்களின் மருத்துவக் கல்வி எனும் பெருங்கனவு ஆண்டுதோறும் நிறைவேறி வருகிறது. ஆண்டுதோறும் புதிய மருத்துவக் கல்லூரிகள் திறக்கப்படுவதால், இந்த எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இந்த ஆண்டு வரை சுமார் 15,066 இடங்களை மருத்துவ படிப்பில் இந்த வழக்கின் மூலமாக இதர பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு பெற்று தந்திருக்கிறாம். சமூகநீதியில் மகத்தான வெற்றி பெற்ற மூன்றாவது ஆண்டில் இன்று நாம் நுழைகிறோம். வெற்றித் திருநாள் இன்று. இருளை நீக்கிய நன்னாள் இன்று”.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

### தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை

# ‘நீட்’ தேர்வு: பதிலளிக்க ஒன்றிய அரசு மறுப்பது ஏன்?

## மக்களவையில் - கலாநிதி வீராசாமி கேள்வி!

புதுடெல்லி, ஆக.2 -

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையான நீட் தேர்வு பிரச்சினைகளை குறித்து பதிலளிக்க ஒன்றிய அரசு மறுப்பது ஏன் என நாடாளுமன்ற மக்களவையில் கழக உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி கேள்வி எழுப்பினார்.

மக்களவையில் நீட் குறித்து கேள்வி எழுப்பப்பட்ட போது வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி பங்கேற்றுப் பேசியதாவது:-

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்சினை குறித்து விவாதிக்கப்படும் போது பிரதமர் அவர்கள் இல்லாதது மிகவும் துரதிஷ்டமானது. பிரதமர் அவர்கள் கண்டிப்பாக இருந்திருக்க வேண்டும். இன்னமும் 5 நிமிடங்கள் இங்கிருந்து இந்த விவாதத்தில் பங்கேற்றிருக்கலாம்.



அனைத்து மாநிலங்களும் இந்த நீட் தேர்வு பிரச்சினையால் கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. குறிப்பாக, தமிழ்நாடு இதனால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. நீட் தேர்வு முதன் முதலில் நடைமுறைக்குக் கொண்டு வந்த போது தமிழ்நாடு தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது. தங்களது மாநிலத்தில் நீட் வேண்டுமா, வேண்டாமா என்பதை அந்த மாநில அரசுகளின் முடிவுக்கு விட்டு விடுங்கள் என்றுதான் நாங்கள் கேட்டுக் கொண்டுள்ளோம். தற்போதுள்ள நிலையில், நீட் தேர்வை இரத்து செய்யப் போகிறீர்களா அல்லது செய்ய மாட்டீர்களா என்றுதான் கேள்வி கேட்டுள்ளோம்.

இந்த கேள்வியில் நீட் தேர்வால் உயிரிழந்த மாணவர்களின் துயரம் தோய்ந்துள்ளது (கடும் குறுக்கீடுகள்) ஆம், அனிதாவிலிருந்து பல மாணவர்கள் இந்த நீட் தேர்வால் பாதிக்கப்பட்டு தங்கள் இன்னுயிரைத் துறந்துள்ளனர். ஆனால் ஒன்றிய அரசு இன்னமும் பிடிவாதமாக “நீட் தேர்வை இரத்து செய்ய மாட்டோம்” என்று ஒரு வரியில் பதில் சொல்லிக் கொண்டுள்ளது.

இந்த தேர்வினால் உயிரிழந்து கொண்டிருக்கும் மாணவர்களின் மரண படுக்கையில் போய், இந்த ஒன்றிய அரசு நீட் தேர்வை இரத்து செய்யும் எண்ணம் இல்லை என்று சொல்லுகிறது என்பதைத் தான் கூற முடியுமா? (கடும் குறுக்கீடுகள்) ஆனால் ஆளும் கட்சியினரோ அரசியல் சட்டம் பற்றி பேசுகின்றனர். இந்த நாட்டில் அவசர கால நிலைமை பிரகடனத்தில் இருந்தபோது சமத்துவம், நீதி, தர்மம் எல்லாம் இல்லாமல் போய் விட்டது என்றும் இன்னமும் வேறு ஏதேதோ பேசுகின்றனர். ஆனால் நீட் பிரச்சனைக்கு ஒரு தீர்வு கோரினால் அது பற்றி மட்டும் வாய் திறக்காமல் இருக்கின்றனர்.

இவ்வாறு டாக்டர். கலாநிதி வீராசாமி எம்.பி. பேசினார்.

### கோயம்புத்தூர் மாவட்டம், கருமத்தம்பட்டியில்

# ரூ.300 கோடி மதிப்பிலான திருக்கோயில் நிலங்கள் மீட்பு!

சென்னை, ஆக.2-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவுறுத்தலின்படியும் இந்து சமய அறநிலையத்துறையின்பகட்டுப்பாட்டிலுள்ளதிருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் கோயம்புத்தூர் மாவட்டம், கருமத்தம்பட்டி, அருள்மிகு கரியமாணிக்கப் பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான ரூ.300 கோடி மதிப்பிலான நிலங்கள் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கப்பட்டு திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மாவட்டம், கருமத்தம்பட்டியில், அமைந்துள்ள கரியமாணிக்கப் பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் மேற்படி கிராமத்தில் சர்வே எண் 283/1ல் 5.36 ஏக்கர் மற்றும் சர்வே எண் 457/1ல் 0.94 ஏக்கர் ஆக மொத்தம் 16.30 ஏக்கர் நிலங்கள் 11 தனிநபர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தது. இந்நிலையில் கோவை மண்டல இணை ஆணையர் பொ.ரமேஷ் அவர்களின் நீதிமன்ற உத்தரவின்படி, சட்டப்பிரிவு 78ன் கீழ் ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, கோவை உதவி ஆணையர் (கூ.பொ.) திருமதி இரா.மேனகா தலைமையில் காவல்துறை மற்றும் வருவாய்துறை அலுவலர்கள் முன்னிலையில் ஆக்கிரமிப்புகளை அகற்றி, அந்நிலங்கள் முழுவதுமாக அளவீடு செய்யப்பட்டு திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டது. மீட்கப்பட்ட நிலங்களின் தற்போதைய சந்தை மதிப்பு ரூ.300 கோடியாகும்.

முதலமைச்சர் தலைமையிலான இவ்வரசு பொறுப்பேற்ற நாள் முதல் நேற்று முன்தினம் (31.07.2024) வரை ரூ.6,446.93 கோடி மதிப்பீட்டிலான 6,746.97 ஏக்கர் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வின்போது திருக்கோயில் தக்கார் பா. தன்ராஜ், வட்டாட்சியர் (ஆலய நிலங்கள்) குமரி ஆனந்தன், காவல் ஆய்வாளர் சண்முகவேல், வருவாய்த்துறை ஆய்வாளர் ரமேஷ், செயல் அலுவலர் இரா.ராஜகுரு, ஆய்வர்கள் மற்றும் நில அளவையர்கள் உடனிருந்தனர்.

### வேலூர் தொகுதியில் உள்ள

# நெசவாளர்களின் மேம்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு?

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 2 -

நாடாளுமன்ற மக்களவையில் வேலூர் தொகுதியில் உள்ள ஜவுளித் துறை மற்றும் நெசவாளர் சமூகங்களின் நலன் மற்றும் மேம்பாட்டிற்காக ஒன்றிய அரசு ஒதுக்கீடு செய்துள்ள நிதி மற்றும் திட்டசேவைகள் குறித்து திமுகவின் வேலூர் மக்களவை உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் உள்ள ஜவுளித் துறை மற்றும் நெசவாளர் சமூகங்களின் நலன் மற்றும் மேம்பாட்டிற்காக ஒன்றிய அரசு நிதி வழங்கியுள்ளதா?அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் இல்லையென்றால், அதற்கான காரணங்கள்?

தமிழ்நாட்டில், குறிப்பாக வேலூர், குடியாத்தம் பகுதியில் ஜவுளித் துறையை மேம்படுத்துவதற்கு நிதி உதவி மற்றும் சந்தைப்படுத்தல் ஆதரவை வழங்க மத்திய அரசு எடுத்த பயனுள்ள நடவடிக்கைகள் என்ன?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

அதற்கு ஒன்றிய அரசின் ஜவுளித் துறைக்கான ராஜாங்க அமைச்சர் பபித்ரா மார்கெரிதா எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் வருமாறு:-

ஜவுளித் துறையை மேம்படுத்துவதற்கான நிதி உதவி மற்றும் சந்தைப்படுத்தல் ஆதரவை இலக்காகக் கொண்டு தமிழ்நாடு உட்பட நாடெங்கும் பல்வேறு திட்டங்கள்/ முயற்சிகளை ஒன்றிய அரசு செயல்படுத்தி வருகிறது. முக்கிய திட்டங்கள்/முயற்சி களில் PM Mega Integrated Textile Regions மற்றும் Apparel (PM MITRA) பூங்காக்கள் திட்டம் ஆகியவை அடங்கும்; MMF துணி, MMF ஆடை மற்றும் தொழில்நுட்பத்தை மையமாகக் கொண்ட உற்பத்தி இணைக்கப்பட்ட ஊக்கத்தொகை (PLI) திட்டம்; தேசிய தொழில்நுட்ப ஜவுளி மிஷன் (NTTM) ஆராய்ச்சி கண்டுபிடிப்பு மற்றும் மேம்பாடு, ஊக்குவிப்பு மற்றும் சந்தை மேம்பாடு ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது; சமர்த் ஜவுளித் துறையில் திறன் மேம்பாட்டிற்கான திட்டம், தேவை உந்துதல், வேலை வாய்ப்பு சார்ந்த, திறன் திட்டத்தை வழங்குகிறது; பட்டு சமக்ரா2 பட்டு வளர்ப்பு மதிப்பு சங்கிலியின் விரிவான வளர்ச்சிக்கு. தேசிய கைவினைப் பொருள் மேம்பாட்டுத் திட்டம் போன்றவை செயல்படுத்தப் படுகிறது.

மேலும், கைத்தறித் துறை மற்றும் கைத்தறி நெசவாளர்களின் நலனை மேம்படுத்துவதற்காக தேசிய கைத்தறி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மூலப்பொருள் வழங்கும் திட்டத்தை இந்திய ஒன்றிய அரசு செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டங்களின் கீழ், தகுதியான கைத்தறி முகவர்/தொழிலாளர்களுக்கு மூலப்பொருட்கள், மேம்படுத்தப்பட்ட தறிகள் மற்றும் துணைக்கருவிகள் கொள்முதல், சூரிய ஒளி அலகுகள், பணிமனை கட்டுமானம், தயாரிப்பு மற்றும் வடிவமைப்பு மேம்பாடு, தொழில்நுட்ப மற்றும் பொதுவான உள்கட்டமைப்பு, உள்நாட்டு கைத்தறி பொருட்களை விற்பனை செய்தல்/ வெளிநாட்டு சந்தைகள் மற்றும் சமூக பாதுகாப்பு போன்றவை வழங்கப்படுகிறது.



கடந்த மூன்று ஆண்டுகளில் (30.6.2024 நிலவரப்படி) வேலூர், குடியாத்தம் மண்டலம் உள்ளிட்ட தமிழ்நாட்டின் கைத்தறித் துறையின் தரம் உயர்த்துவதற்கான நிதி உதவி மற்றும் சந்தைப்படுத்தல் ஆதரவை வழங்க அரசு எடுத்த பயனுள்ள நடவடிக்கைகள் பின்வருமாறு:

(i) 24 கைத்தறி கிளஸ்டர்கள் நிதி உதவிக்காக ரூ. தமிழகத்தில், 14.22 கோடி ரூபாயில், வேலூர் தொகுதியில், ஒரு கைத்தறி குழுமம் எடுக்கப்பட்டு, இதுவரை, 48.87 லட்சம் ரூபாய் விடுவிக்க ப்பட்டுள்ளது.

(ii) 3,400 க்கும் மேற்பட்ட கைத்தறி நெசவாளர்கள் தமிழ்நாட்டில் மேம்படுத்தப்பட்ட தறிகள்/உபகரணங்களை வழங்கினர்.

(iii) 18 சந்தைப்படுத்தல் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டு, ரூ.7.26 கோடி நிதி வழங்கப்பட்டது. தமிழகத்தில் கைத்தறி பொருட்களின் விற்பனையை ஊக்குவிக்க வேண்டும். தமிழ் நாட்டில் கைத்தறி அமைப்புகளுக்கு ரூ.4.78 கோடி சந்தைப்படுத்தல் ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது

iv) வேலூர் மண்டல கைத்தறி அமைப்புகளுக்கு ரூ.38.87 லட்சம் உட்பட தமிழ் நாடு நெசவாளர் முத்ரா திட்டத்தின் கீழ் 15,000க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது

(v) தமிழ்நாட்டில் பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா மற்றும் பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா ஆகியவற்றின் கீழ் 40,000 க்கும் மேற்பட்ட பயனாளிகள் பதிவு செய்துள்ளனர்.

vi) தமிழ் நாட்டில் போக்குவரத்து மானியம் மற்றும் விலை மானியத்தின் கீழ் சுமார் 340 லட்சம் கிலோவிற்கும் அதிகமான நூல் வழங்கப்பட்டது.

vii) தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் 94,000 கைத்தறி நிறுவனங்கள்/ நெசவாளர்கள் பயனடைகின்றனர்.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் தனது பதிலில் தெரிவித்தார்.

### வயநாடு நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்த

# திமுக வார்டு துணைச் செயலாளர் காளிதாசன் உடலுக்கு அஞ்சலி!

## மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் - கழக நிர்வாகிகள் நேரில் செலுத்தினர்!

உதகை, ஆக. 2-

வயநாடு மாவட்டத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்த, நெல்லியாளம் நகரம் 14வது வார்டு கழக துணை செயலாளர் காளிதாசனின் உடல் இடிபாடுகளிலிருந்து மீட்கப்பட்டு மரப்பாலம் கொண்டு வரப்பட்டது.

நீலகிரி மாவட்ட தி.மு.க. சார்பில், நேற்று முன்தினம் (31.7.2024) மாவட்ட திமுக செயலாளர் பா.மு.முபாரக் கழக நிர்வாகிகளுடன் நேரில் சென்று கழக கொடி போர்த்தி, மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி, காளிதாசன் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

உடன் மாவட்ட துணை செயலாளர் ரவிகுமார், மாவட்ட பொருளாளர் நாசர் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் திராவிடமணி, காசிலிங்கம், நெல்லியாளம் நகர செயலாளர் சேகரன், ஒன்றிய கழக செயலாளர்கள் சிவானந்தராஜா, சுஜேஷ், தலைமை கழக சொற்பொழிவாளர் பாண்டியராஜ், தலைமை பொதுக்குழு உறுப்பினர் சதக்கத்துல்லா, நகராட்சி தலைவர்கள் சிவகாமி, பரிமளா, கூடலூர் ஊராட்சி ஒன்றிய தலைவர் கீர்த்தனா, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ஆலன், அன்வர்அப்துல்லா, இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் முரளிதரன் உட்பட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னணியினர் ஏராளமானவர்கள் இருந்தனர்.



வயநாடு நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்த தி.மு.க. வார்டு துணை செயலாளர் காளிதாசன் உடலுக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் பா.மு.முபாரக் மற்றும் கழக நிர்வாகிகள் நேரில் அஞ்சலி செலுத்தினர்.